# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032.
தொலைபேசி எண்: 044–22201337.
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in


முன்னிலை : மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 131 /பேரூ/2024
நாள்:13.09.2024

திரு. ச. கார்த்திகேயன்,
சேத்தூர்,
விருதுநகர் மாவட்டம். ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
வ.புதுப்பட்டி பேரூராட்சி,
விருதுநகர் மாவட்டம். ... எதிர்மனுதாரர்

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டம், சேத்தூர் அஞ்சல், எண்.42, பிள்ளைமார் தென்வடல் தெரு என்ற முகவரியை சேர்ந்த திரு. ச. கார்த்திகேயன், என்பவரது 29.09.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 09.10.2023 அன்று பெறப்பட்டு, 131 /பேரூ/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை:

விருதுநகர் மாவட்டம், சேத்தூர் என்ற இடத்தை சார்ந்த மனுதாரர் திரு.ச.கார்த்திகேயன் என்பவர் தனது 29.09.2023 நாளிட்ட மனுவில், விருதுநகர் மாவட்டம், வ.புதுப்பட்டி பேரூராட்சியில் 2015–16, 2016–17 மற்றும் 2017–18 ஆகிய நிதியாண்டுகளில் பாரதப் பிரதமரின் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் மத்திய/மாநில அரசின் பங்குத் தொகை, பேரூராட்சியின் பங்குத் தொகை மற்றும் பயனாளி பங்குத்தொகையுடன் கூடிய முறையே 172, 373, மற்றும் 498 என ஆகமொத்தம் 1043 தனிநபர் கழிப்பிடங்கள் கட்டப்பட்டதில் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக புகாராக தெரிவித்து முறைகேடுகள் செய்தவர்களின் மீது உரிய நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

(2) மனுதாரரால் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ள மனு ஆய்வு செய்யப்பட்டது. 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10 (3) (C)–ல், முறையீட்டு மனுவில் கூறப்பட்டுள்ள நிகழ்வு நடைபெற்ற தேதியிலிருந்து 5 ஆண்டுகள் முடிவடைந்த பின்பு தாக்கல் செய்யப்பட்டுள்ள முறையீடு எதனையும் அதன் தொடர்பான பொருட்பாடுகளில் விசாரணை செய்யக்கூடாது என குறிப்பிடப்பட்டுள்ளது

(3) மேற்கண்ட சட்டப்பிரிவின்படி, மனுதாரரின் மனுவில் கோரிக்கையாக தெரிவிக்கப்பட்ட நிகழ்வானது 5 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்று உள்ள நிலையில் [அதாவது 2015–16 ஆம் ஆண்டு முதல் 2017–18 ஆம் நிதியாண்டு வரை] மனுதாரால் சமர்ப்பிக்கப்பட்ட முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்க இயலாது என்பதால் மனுதாரரின் கோரிக்கை குறித்து பேரூராட்சிகளின் இயக்குநரை அணுகி உரிய நிவாரணம் தேடி கொள்ளுமாறு மனுதாரரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

4) 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் 13 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. ச. கார்த்திகேயன்,
42, பிள்ளைமார் தென்வடல் தெரு,
சேத்தூர் அஞ்சல், இராஜபாளையம் வட்டம்,
விருதுநகர் மாவட்டம் – 626 121

2) செயல் அலுவலர்,
வ.புதுப்பட்டி பேரூராட்சி,
விருதுநகர் மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028

4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பு அலுவலர்,
(Nodal Officer) (பெயரிடப்பட்ட உரையில்),
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028

நகல் :

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்.
இ.கோ.,/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

19/9/24

சட்ட ஆலோசகர்/செயலாளர் (முகூபொ).